# இந்தியத் துணைத் தூதரகம்
**யாழ்ப்பாணம்**

**ஊடக அறிக்கை**

## முன்னாள் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியின் மறைவுக்கான இரங்கல் புத்தகம்

இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் ஸ்ரீ பிரணாப் முகர்ஜி அவர்கள் 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31ஆம் தேதி புது தில்லியில் காலமானார்.

இந்தியாவின் 13வது குடியரசுத் தலைவராக பிரணாப் முகர்ஜி அவர்கள் ஜூலை 25, 2012 முதல் ஜூலை 25, 2017 வரை பதவி வகித்தார். இந்திய குடியரசுத் தலைவராகுவதற்கு முன்னர், திரு முகர்ஜி அவர்கள் பல்வேறு காலகட்டங்களில் பாதுகாப்பு, வணிகம், வெளியுறவு மற்றும் நிதி அமைச்சராகப் பணியாற்றினார். ஏழு முறை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த பிரணாப் முகர்ஜிக்கு இந்தியாவின் உயரிய விருதான “பாரத ரத்னா” விருது வழங்கப்பட்டது.

மறைந்த பிரமுகருக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக, இந்தியா முழுவதும், ஆகஸ்ட் 31, 2020 முதல், செப்ரெம்பர் 06, 2020 வரை **ஏழு நாட்களுக்கு அரசு துக்கம்** அனுசரிக்கப்படுகிறது.

அன்னாரது மறைவுக்கான இரங்கலுரையை தெரிவிப்பதற்காக இல.14, மருதடி வீதியில் அமைந்துள்ள யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தில் இம்மாதம் **02** மற்றும் **03**ஆம் திகதிகளில் **காலை 10.00 மணி** முதல் **மாலை 5.00 மணி** வரை ஒரு **இரங்கல் புத்தகம்** திறந்து வைக்கப்பட்டிருக்கும்.

**01 செப்ரெம்பர் 2020**

நல்லூர்**, யாழ்ப்பாணம்.**